# அன்பு உணர்வே ஆன்ம உணர்வு!



ப்ரக்ருன்

# அன்பு உணர்வே

# ஆன்ம உணர்வு!

## ப்ரக்ஞன்

Prajnan Website:- paraparam.in

# நூல் விளக்கம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | அன்பு உணர்வே ஆன்ம உணர்வு! |
| விளக்கம் | : | ப்ரக்ஞன் [Prajnan] |
| மொழி | : | தமிழ் |
| வகை | : | தன்னாட்டம் |
| முதற்பதிப்பு | : | 2019 |
| நூலின் அளவு | : | டெம்மி |
| பக்கங்கள் | : | 15 |
| தாள் | : | A5 (5.83” X 8.27”) |
| எழுத்து அளவு | : | 12 புள்ளிகள் |
| உரிமை | : | அனைவருக்கும் |
| கட்டமைப்பு | : | சாதா பைண்டு அட்டை |
| கணினி அச்சு | : | ஓம் கிராபிக்ஸ் |
| விலை | : | அக விழிப்பு |

# அன்பு உணர்வே ஆன்ம உணர்வு!

அன்பே அனைத்துமாய் உள்ளது. இந்த மொத்த பிரபஞ்சமே அன்பின் அற்புத வெளிப்பாடு. அதாவது, அணுக்களை அணுக்களோடும், மூலக்கூறுகளை மூலக் கூறுகளோடும் ஒன்றிணைப்பது அன்புதான்.

இந்த பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து கோள்களும் ஒன்றை ஒன்று ஈர்த்துக்கொண்டு, ஒன்றின்மீது ஒன்று மோதிக் கொள்ளாமல், சூரியனை மையமாகக் கொண்டு சுற்றுவதும் அன்பினால்தான்.

அவ்வாறே, இந்த பிரபஞ்சத்தில் படைக்கப்பட்ட அனைத்தும் ஒன்றை ஒன்று விரும்பியவாறு ஒரு ஈர்ப்பை வெளிப்படுத்துவதும் அன்புதான்.

உலகின் அனைத்து அன்புக்கும் ஆதாரமாக **ஆன்மா** (பேருணர்வு) திகழ்கின்றது. அந்த ஆன்மாவை உணர வேண்டும். அந்த பேருணர்வாகிய ஆன்மா தனி மனித ஆன்மா அல்ல. அது எங்கும் நிறைந்து, அனைத்தையும் படைத்து, காத்து, ஒடுக்குகின்ற ஒன்றேயாகிய **வெட்டவெளி** என்ற உணர்வுவெளி என்பதை எல்லா சாஸ்திரங்களும் எடுத்துரைக்கின்றன.

அதனால்தான், ஆண்களை பெண்களிடம் ஈர்ப்பதும், பெண்களை ஆண்களிடம் ஈர்ப்பதும் அதே அன்புதான்.

மனிதன் நேசிக்கின்ற ஒவ்வொன்றும் அந்த அன்பினால் மட்டும்தான். மனிதனைத்தவிர, மற்ற மிருகங்கள், பறவைகள் என எல்லாமே அந்த ஏக அன்பின் அடிப்படையிலேதான் அமைந்திருக்கின்றன.

இந்த பிரபஞ்சம் முழுவதும் ஒரு மையத்தை நோக்கி ஈர்க்கப்படுவது அந்த அன்பினால்தான்.

சாதாரண ஒருசெல் அணுவாகிய **அமீபா** முதல் பல செல்கள் அணுக்களாக உள்ள **மனிதன்** வரை, உள்ள அனைத்து வெளிப்பாடுகளும் அந்த அன்பின் அடைப்படையில் அமைந்ததே ஆகும்.

அந்த அன்பு எங்கும், எல்லாவற்றிலும் உள்ளது.

ஒன்றை ஒன்று கவருவது அன்பினால்தான்.

ஒரு தாய் தன் சேயை நேசிப்பதும் அன்பு. ஒரு கணவன் மனைவியையும், மனைவி கணவனையும் நேசிப்பதும் அன்பு.

அவ்வாறே, குழந்தைகள் தாய், தந்தையிடம் காட்டும் நேசமும், பாசமும் அன்பு. இந்த பிரபஞ்சத்தில் உள்ள தூண்டு சக்தி அன்பு மட்டுமே.

ஒரு தாய் தன் குழந்தைக்காக உயிர் விடத் துணிவதும் அன்பு. ஒரு கணவன் மனைவிக்காக உயிர் விடத்துணிவதும் அன்பு. ஒரு வீரன் நாட்டிற்காக உயிரை விடத் துணிவதும் அன்பு.

இதிலே, ஆச்சரியமானது என்னவெனில், ஒரு திருடன் திருடுவதும் அன்பினால்தான். கொலைகாரன் கொலை செய்வதும் அன்பினால்தான்.

இதிலே, இவர்கள் இருவரும் வைத்துள்ள அன்பு என்பது, அவர்களைச் சார்ந்தவர்கள்மீது வைத்துள்ள சுயநலம் சார்ந்த அன்பு.

அதாவது, இவர்களது செயல்களில் உள்ள நோக்கம் அன்புதான் என்றாலும், அந்த அன்பு தவறான பாதையில் செல்கிறது. இருப்பினும் இங்கேயும் அன்புதான் இருக்கின்றது.

அந்த அன்பு மனதின் இருமைகளினால், சுயநலம் ஆகி, தனக்கு வேண்டியவர்களிடம் மட்டுமே காட்ட விரும்புவதினால், அது தன்னுடையது என்ற பற்றாக மாறி, மற்றவர்களுக்கு துன்பத்தைத் தருவதாக அமைந்து விடுகின்றது.

அதுவே, இருமைகளற்ற ஒன்றேயாகிய பேருணர்வின் (ஆன்மாவின்) தூய அன்பு உணர்வு ஏற்றத்தாழ்வுகள் ஏதுமின்றி, எல்லாவற்றிலும் ஒன்றாய் மலர்கின்றது. அந்த அன்பு உணர்வே அனைத்திலும் உள்ளது.

அந்த அன்பு இந்த பிரபஞ்சத்தின் தூண்டுசக்தி என்பதினால், அழகற்றவர்கள், ஊனமுற்றவர்கள் என்று யாரிடமும், எதனிடமும் ஏற்றத்தாழ்வுகளைக்காட்டாது.

ஆக, அன்பு இல்லாவிட்டால், இந்த பிரபஞ்சம் இல்லை. இந்த அன்புணர்வு அனைத்திலும் வெளிப்படுவதை உணர்ந்துக்

கொள்ளக்கூடிய மேம்பட்ட மனம் படைத்த மனிதன் மட்டுமே, அந்த பேருணர்வை (ஆன்மாவை) தன்னுள்ளே அனுபவமாக உணர முடியும்.

அதாவது, பேருணர்வாகிய **உணர்வுவெளி** என்ற வெட்டவெளி மட்டுமே எங்கும், எதிலும் எல்லை இல்லாமல் நீக்கமற நிறைந்துள்ளது என்ற உண்மையை மனித மனம் மட்டுமே உணர முடியும்.

அதற்கான அடிப்படை தகுதிகளை அந்த மனித மனம் அடைந்தாக வேண்டும். அப்பொழுது மட்டும்தான் இறையனுபூதி என்பது என்ன? என்பதும் விளங்கும்.

அதற்கான வழிமுறைகள் மூன்று படிநிலைகளாக மூன்று வழிகளில் கூறப்படுகின்றன. அவைகளை, ச்ரவண, மனன, நிதித்யாஸனம் எனப்படுகின்றது. அதிலே, முதலில் வருவது ச்ரவணம். இரண்டாவது மனனம். மூன்றாவது நிதித்யாஸனம்.

இந்த மூன்று படி நிலைகளை, ஒவ்வொன்றாக மனிதன் தன் நடைமுறை வாழ்க்கையில் கொண்டு வந்தால் மட்டுமே, அவன் ஆன்மாவை (பேருணர்வை அல்லது இறைவனை) அனுபவமாக உணர முடியும்.

எனவே, தக்க சத்குருவின் மூலம் மனதை மேம்பட்ட மெய்யறிவின் அனுபவத்திற்கு உட்படுத்த வேண்டுமானால், அதற்கான உபநிஷத பாடங்களையும், அதன் வாக்கியங்களின்

ஆழமான உட்பொருளையும், ஒருங்கிணைந்த மன நிலையில் படிப்படியாக கேட்டுப் பழக வேண்டும்.

அதாவது, முதலில் ஆத்ம ஞான விசயங்களை கேட்க வேண்டும். இதுவே ச்ரவணம் ஆகும்

அவ்வாறு கேட்டவைகளை இடைவிடாமல் மனதினால் சிந்தித்து, அதில் உள்ள சந்தேகங்களை சத்குருவிடமே கேட்டு தெளிவுபெற வேண்டும். இதுவே, மனனம் ஆகும்.

அடுத்து, மூன்றாவதாக கேட்டவைகளைப்பற்றி சிந்தித்து, சந்தேகம் தெளிந்தபிறகு, அத்தகைய தெளிவடைந்த மனதிலே, அந்த உணர்வை உள்ளத்தில் உணர முற்பட வேண்டும். அந்த உணர்வை (அன்பை) அனுபவமாக அறிவதே நிதித்யாஸனம் ஆகும்.

ஆக, அன்பினால் மட்டுமே அனைத்தும் இந்த பிரபஞ்சத்தில் நிறைந்திருக்கின்றது.

அதிலே, என்மனமும், உன்மனமும் ஒன்றாக இணைவதே அன்பு. அது, ஆண் ஆனாலும், பெண் ஆனாலும், அவர்கள் இருவரிடமும் ஒன்றுபடுவது எதுவோ, அதுவே **அன்பு.**

அந்த அன்புக்கு அடைக்கும் தாழ்ப்பாள் கிடையாது. அது எப்பொழுதும் திறந்தே இருக்கின்ற நிலையிலே ஒன்றை ஒன்று அன்பு செலுத்திக் கொள்வதில் தடைகள் ஏதும் கிடையாது.

இந்த அன்பு என்னிடம் இருந்து வெளிப்பட்டு, எல்லாவற்றிலும் பிரதிபிம்பித்து, அதன்காரணமாக என்னையே எல்லாவற்றிலும் கண்டு, **“நான் இருக்கிறேன்”** என்றும், என்னால்தான் இந்த உலகம் (பிரபஞ்சம்) இருக்கிறது என்றும், தன்னில்தானாய், தன்னுணர்வில் நின்று, அந்த பிரபஞ்ச பேருணர்வை எல்லாவற்றிலும் காணும் தூய அன்பினால், அனைத்தும் ஒன்றாய் என்னுள் **‘நான் உணர்வதே’** இங்கு **“இறையனுபூதி”** எனப்படுகின்றது.

அதாவது, என்னை நான் எல்லாவற்றிலும் காண்பதே, உண்மையில் ஆன்மாவை (இறைவனை) அனுபவமாக அறிவதாகும்.

சுருங்கக்கூறுவது என்றால், நம்மை (நம் மனதை) முற்றிலுமாக அந்த பேருணர்வில் இணைத்து, இருப்பதெல்லாம் இறைவ(நர)னே என்ற, ஏக அறிவில் (சிவத்தில்) இரண்டறக் கலப்பதே**, “இறையனுபவம்”** அல்லது **“ஆத்மானுபவம்”** ஆகும்.

இதுவொன்றே, ஏக இறைவனை (பேருணர்வை) அனுபவமாகவும், நேரடியாகவும் தரிசிப்பது ஆகும். அதாவது, நேரடி தரிசனம் என்பது நம்மிடையே உள்ள கண்கள், காதுகள், மூக்கு, நாக்கு, தோல் போன்ற ஐம்புலன்களின் மூலம் உண்டாவது கிடையாது.

அது, இருமைகளால் எல்லாவற்றையும் தனித்தனியாக பிரித்து வைத்துக் கொண்ட மனம், அந்தப்பேருணர்வை

பற்றியவுடன் இருமைகளற்ற நிலையில், அந்த ஆன்மாவுடன் இரண்டறக் கலந்து, தன் தனித்துவத்தை இழந்து விடுவதே, இறைதரிசனம் எனப்படுகிறது.

ஆகவே, உண்மையிலேயே யோகியாக வாழ விரும்புபவர்கள், நுனிப்புல் மேய்வதை விடுத்து, விவேகத்துடன் மனதை மேம்படுத்திக்கொண்டு, அந்த மெய்யறிவை தக்க சத்குரு மூலம் அறிந்துணர்ந்து, உடனடியாக, அதை தன் வாழ்நாள் இலட்சியமாக எடுத்துக் கொண்டு, வாழ முற்பட வேண்டும்.

அதையே எப்போதும் நடைமுறைப்படுத்த வேண்டும். அந்த இலட்சியத்திற்காகவே இந்த உயரிய மனிதப்பிறவி கிடைத்திருக்கின்றது என்பதில் திடமான வைராக்கியம் உண்டாக வேண்டும்.

மற்ற தேவையற்ற விசய, சுகங்களில் (புறத்தில்) ஆர்வத்தைத் தவிர்த்து, அந்த இலட்சியத்திற்காகவே உயிருள்ள எல்லா சீவர்களிடத்திலும், உயிரற்ற எல்லா ஜடப்பொருட்களிடத்திலும், (கல்லையும், மண்ணையும் கொண்டு, கடவுள் சிலைகளையும், ஆலயங்களையும் அமைத்து) அன்பு செலுத்தி (அகத்தில்) வாழுகின்ற வாழ்க்கையில் உண்டாகின்ற உண்மையான உணர்வே (ஆன்மா) இறைவ(தன்)னை எல்லாவற்றிலும் சமமாக பார்க்கக் கூடிய பக்குவத்தில் **"நான் இந்த பிரபஞ்சத்தில் இருப்பதைப் போன்று, இந்த பிரபஞ்சம் என்னுள் இருக்கிறது"** என்று உணர இயலும்.

ஒரு உப்புக்கட்டியை கடலில் கரைத்துவிட்ட பிறகு, மீண்டும் அதை எப்படி தனித்து பிரித்தறிய முடியாதோ, அவ்வாறே, இறைவனும் இந்த பிரபஞ்சம் முழுவதிலும் பிரிக்கமுடியதவாறு கலந்திருக்கிறார்.

இந்த பிரபஞ்சத்திலுள்ள ஒரு அணுகூட தனித்து இயங்க முடியாது, அது தன்னுடன் இந்த உலகம் முழுவதையும் இழுத்துக் கொண்டுதான் இயங்க முடியும் என்கின்றார் சுவாமி விவேகானந்தர்.

இந்த பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொன்றும் ஒன்றை ஒன்று சார்ந்துள்ளன.

இந்த சார்பு தன்மையின் மூலம் இயற்கையின் எல்லா அம்சங்களிலும் ஓர் அதிர்ஷ்டான தேவதையாக **'அன்பு'** இருக்கின்றது. அந்த **"அன்பே சிவம்"** என்கின்றது சாஸ்திரம்.

நன்றி!

என்றும் அன்புடன்,

**ப்ரக்ருன்.**

**அன்பே (ஆன்மாவே) அனைத்துமாக உள்ளது :-**

स होवाच, न वा अरे पत्युः कामाय पतिः प्रियो भवति, आत्मनस्तु कामाय पतिः प्रियो भवति । न वा अरे जायायै कामाय जाया प्रिया भवति, आत्मनस्तु कामाय जाया प्रिया भवति । न वा अरे पुत्राणां कामाय पुत्राः प्रिया भवन्ति, आत्मनस्तु कामाय पुत्राः प्रिया भवन्ति । न वा अरे वित्तस्य कामाय वित्तं प्रियं भवति, आत्मनस्तु कामाय वित्तं प्रियं भवति । न वा अरे पशूनां कामाय पशवः प्रिया भवन्ति, आत्मनस्तु कामाय ब्रह्म प्रियं भवति । न वा अरे क्शत्रस्य कामाय क्शत्रं प्रियं भवति, आत्मनस्तु कामाय क्शत्रं प्रियं भवति । न वा अरे लोकानां कामाय लोकाः प्रिया भवन्ति, आत्मनस्तु कामाय लोकाः प्रिया भवन्ति । न वा अरे देवानां कामाय देवाः प्रिया भवन्ति, आत्मनस्तु कामाय देवाः प्रिया भवन्ति । न वा अरे वेदानां कामाय वेदाः प्रिया भवन्ति, आत्मनस्तु कामाय भूतानि प्रियाणि भवन्ति । न वा अरे सर्वस्य कामाय सर्वं प्रियं भवति, आत्मनस्तु कामाय सर्वं प्रियं भवति । आत्मा वा अरे द्रष्टव्यः— श्रोतव्यो मन्तव्यो निदिध्यासितव्यो मैत्रेयि; आत्मनि खल्वरे दृष्टे श्रुते मते विज्ञात इदं सर्वं विदितम् ॥ ६ ॥

- பிருஹதாரண்யக உபநிஷதம் (2:4.5)

விளக்கம்:-

இது பிருஹதாரண்யக உபநிஷதம் நான்காவது அத்தியாயம் **“மைத்ரேயி பிராம்மணம்”** என்ற பகுதியில், 5 - ஆவது ஸ்லோகமாக வருகின்றது.

*அதிலே, யாஜ்ஞவல்கிய முனிவர் தன் மனைவி **மைத்ரேயி** என்பவரிடம் பின்வருமாறு கூறுகின்றார்.*

அன்பே!, கணவனுக்காக கணவன் நேசிக்கப் படுவதில்லை, ஆன்மாவிற்காகவே **கணவன்** நேசிக்கப் படுகிறான்.

மனைவிக்காக மனைவி நேசிக்கப்படுவதில்லை, ஆன்மாவிற்காகவே **மனைவி** நேசிக்கப்படுகிறாள்.

பிள்ளைகளுக்காக பிள்ளைகள் நேசிக்கப் படுவதில்லை. ஆன்மாவிற்காகவே **பிள்ளைகள்** நேசிக்கப்படுகிறார்கள்.

செல்வத்திற்காக செல்வம் நேசிக்கப் படுவதில்லை, ஆன்மாவிற்காகவே **செல்வம்** நேசிக்கப்படுகிறது.

பிராமணனுக்காக பிராமணன் நேசிக்கப் படுவதில்லை, ஆன்மாவிற்காகவே **பிராமணன்** நேசிக்கப்படுகிறான்.

சத்திரியனுக்காக சத்திரியன் நேசிக்கப் படுவதில்லை, ஆன்மாவிற்காகவே **சத்திரியன்** நேசிக்கப்படுகிறான்.

உலகங்களுக்காக உலகங்கள் நேசிக்கப் படுவதில்லை, ஆன்மாவிற்காகவே **உலகங்கள்** நேசிக்கப்படுகின்றன.

தேவர்களுக்காக தேவர்கள் நேசிக்கப்படுவதில்லை, ஆன்மாவிற்காகவே **தேவர்கள்** நேசிக்கப்படுகிறார்கள்.

எதற்காகவும் எதுவும் நேசிக்கப்படுவதில்லை, ஆன்மாவிற்காகவே **அனைத்தும்** நேசிக்கப்படுகின்றன.

என்அன்பே மைத்ரேயி! ஆன்மாவையே காண வேண்டும், கேட்க வேண்டும், சிந்திக்க வேண்டும், நம்மையே (ஆன்மாவை) அனைத்திலும் நிறைத்துக் கொள்ள வேண்டும்.

ஆக, கேட்பதாலும், சிந்திப்பதாலும் மட்டுமே மனிதன் மேலான ஞானத்தை அடைந்து, ஆன்மாவை அறிவதால், அனைத்தும் அறியப்படுகின்றன.

**“எதை அறிந்துக் கொண்டால், வேறு எதையும் அறியத் தேவை இல்லையோ, அதை அறிவதே அறிவு”**

அதற்கான ஆறாம் அறிவு (பேருணர்வு) என்ற பகுத்தறிவு படைத்த உயிரினம் மனித இனம் மட்டுமே ஆகும்.

ஓம் தத் ஸத்!

**Prajnan**

**Website:- paraparam.in**

**E - mail:- prajnan@paraparam.in**

# அன்பு உணர்வே ஆன்ம உணர்வு!



ப்ரக்ருன்